**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV, BNSS)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.768/2025 |
| Deposition of witness for Prosecution | : | P.W– 2 |
| Name | : | கிருஷ்ணமூர்த்தி, 25 |
| Father Name/Husband Name | : | முத்துபாண்டி |
| Village | : | வள்ளுவர் நகர் |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | எலெக்ட்ரீசன் வேலை |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th day of June 2026.

**(A1 absent. 355 BNSS petition filed and allowed. A2 present).**

முதல் விசாரணை

1 நான் தற்போது வள்ளுவர் நகரில் வசித்து எலெக்ட்ரீசன் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அண்ணன். ஆஜர் 2வது எதிரியை எனக்கு தெரியும். ஆஜர் இல்லாத 1வது எதிரியை எனக்கு தெரியும். கடந்த 01.08.2025 ஆம் தேதி இரவு 12.00 மணியளவில் கூசாலிபட்டியில் உள்ள ஆர்.டி.ஓ ஆபிஸ் அருகே சுடலைமாடாசாமி கோவிலுக்கு நானும், ராமசந்திரனும் சென்றோம். பின்னர் அங்கிருந்து இருச்சக்கர வாகனத்தில் ஹோட்டலுக்கு சாப்பிட போகும்போது கனகராஜ் அங்கே வந்தார். எங்கே போகிறீர்கள் என்று கேட்டார். நாங்கள் சாப்பிட போகுகிறோம் நீயும் வா என்று நாங்கள் கூறினோம்.

2 பின்னர் நாங்கள் மூன்று பேரும் சேர்ந்து எம்.எல்.ஏ ஆபிஸ் அருகில் உள்ள ஹோட்டலில் சாப்பிட்டு விட்டு கனகராஜை அவரது வீட்டில் இறக்கிவிடுவதற்காக நாங்கள் சென்றபோது கனகராஜீன் அம்மா மற்றும் அவரது அப்பா அவரது வீட்டில் இருந்தார்கள். அப்போது கனகராஜீன் அம்மா எங்களை பார்த்து தேவடியா மகனே என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார். அதற்கு நானும், ராமசந்திரனும் ஏன் எங்களை அசிங்கமாக பேசுகிறீர்கள் என்று கனகராஜீன் அம்மாவிடம் கேட்டோம். எங்களை கனகராஜ் அம்மா அடிக்க கை ஓங்கினார்.

3 கனகராஜ் அப்பா வீட்டின் வாசலில் இருந்த இரும்பு கம்பியை வைத்து ராமசந்திரனின் நெற்றியில் தாக்கினார். அதை நான் தடுக்க முற்பட்டபோது

என்னையும் கனகராஜ் அப்பா இரும்பு கம்பியால் தலையில் அடித்தார். பின்னர் நாங்கள் இருவரும் கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்ந்தோம். பின்னர் கோவில்பட்டி கிழக்கு காவல் நிலைய போலீசார் மருத்துவமனை வந்து எங்களை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

4 எனக்கு எழுத, படிக்க தெரியாது. அந்த விவரத்தை நான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன். மருத்துவமனையில் வைத்து வாங்கியதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று அதனால் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்த போது இரும்பு கம்பியால் அடிக்கப்பட்டதாக சொன்னேன் என்றால் சரிதான். நான் சொன்னதைதான் போலீசார் எழுதினார்கள். ராமசந்திரனை அடிக்கும் போது நான் தடுக்க சென்றதாக போலீசார் விசாரணையில் நான் சொன்னதை போலீசார் எழுதி கொண்டார்கள் என்றால் சரிதான்.

5 பால்பண்ணையில் அரிவாளால் தாக்கபட்டதாக நான் மருத்துவரிடம் சொன்னேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தின் அருகே ஏராளமான வீடுகள் உள்ளது என்றால் சரிதான். சம்பவத்தின்போது எங்களை தவிர வேறு யாரும் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரிதான். நானும், ராமசந்திரனும் தான் சம்பவத்தன்று இரவு குடிபோதையில் சென்று எதிரிகளின் வீட்டில் பிரச்சனை செய்தோம் என்றாலும், எதிரிகளை தாக்கி காயம் ஏற்படுத்தினோம் என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது என்றால் நாங்கள் தொடவே இல்லை.

6 நாங்கள் எதிரிகளின் வீட்டிற்கு சென்று பிரச்சனை ஏற்படுத்தி காயம் ஏற்படுத்தி விட்டு இருச்சக்கர வாகனத்தில் வேகமாக செல்லும்போது தவறி விழுந்ததால் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.1 எனது அண்ணன் முறை என்பதால் அவருக்கு ஆதரவாக நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் எழுதி கையொப்பம் வாங்கியதில் யார் யார் கையொப்பம் செய்தார்கள் என்றால் நான் மயக்கமாக இருந்ததால் எனக்கு தெரியாது. **மறு விசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.